# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>இலங்கையின் 10 ஆவது பாராளுமன்றத்திற்கான இலங்கை-இந்திய பாராளுமன்ற நட்புறவு சங்கம்</u>**

இலங்கையின் 10ஆவது பாராளுமன்றத்திற்கான இலங்கை-இந்திய பாராளுமன்ற நட்புறவு சங்கம், இலங்கை பாராளுமன்றத்தின் சபாநாயகர் கௌரவ டாக்டர்.ஜெகத் விக்ரமரத்ன அவர்களின் வழிநடத்தலில், 2025 மே 08 ஆம் திகதி அன்று பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த கூட்டத்திற்கு இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

2. இதில் பல்வேறு அரசியல் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் உட்பட கிட்டத்தட்ட 100 உறுப்பினர்கள் பங்கேற்றனர். இதன்போது, சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கௌரவ டாக்டர். நளிந்த ஜெயதிஸ்ஸ அவர்கள் இச்சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஜே.சி. அலவதுவல, தனுர திசாநாயக்க, ரவி கருணாநாயக்க ஆகியோர் சங்கத்தின் உப தலைவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன், கௌரவ டாக்டர்.கவிந்த ஹேஷான் ஜெயவர்தன இச்சங்கத்தின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்து, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் ஸ்ரீதரன் மற்றும் அனுஷ்கா திலகரத்னே ஆகியோர் உதவிச் செயலாளர்களாகவும், பெருந்தொட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் கௌரவ சுந்தரலிங்கம் பிரதீப் அவர்கள் சங்கத்தின் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

3. இந்நிலையில், இந்திய பாராளுமன்ற மக்களவைத் தலைவர் ஸ்ரீ ஓம் பிர்லா, இலங்கை-இந்திய பாராளுமன்ற நட்புறவு சங்கத்தை மீண்டும் ஒன்றுகூட்டியமைக்காக இலங்கை பாராளுமன்ற சபாநாயகருக்கும் ஏனைய எம்.பி.க்களுக்கும் வாழ்த்து தெரிவித்து விசேட கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

4 இந்நிகழ்வில் உரையாற்றிய கௌரவ (டாக்டர்) ஜகத் விக்ரமரத்ன அவர்கள், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பகிரப்பட்ட வரலாறு, மதம் மற்றும் கலாசாரத்தின் இணையற்ற தொடர்பை வலியுறுத்தியிருந்தார். இலங்கையின் நம்பகமான நண்பராக இந்தியா தன்னை மீண்டும் மீண்டும்

நிரூபித்துள்ளதாகவும், இருதரப்பு பங்குடைமையின் தொடர்ச்சியான விஸ்தரிப்பினை வரவேற்றதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

5 இதேவேளை, உயர் ஸ்தானிகர் அவர்கள் உரை நிகழ்த்தும்போது, இரு 'நாகரிக இரட்டையர்களுக்கும்' இடையிலான பகிரப்பட்ட ஜனநாயக மரபுகளை சுட்டிக்காட்டினார். அமைப்பின் புதிய தலைவர், ஏனைய பதவிதாரிகள் மற்றும் உறுப்பினர்களை பாராட்டிய அவர், இந்திய–இலங்கை மக்களிடையேயான தொடர்பை இச்சங்கம் மேலும் வலுவாக்குமென நம்பிக்கை வெளியிட்டார்.

6. பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் 2025 ஏப்ரலில் மேற்கொண்ட இலங்கை விஜயத்தின் போது, இலங்கையர்களுக்கான 1000 பயிற்சி ஆசனங்கள் அறிவிக்கப்பட்டன. இந்த ஆசனங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சேவை அதிகாரிகள், தொழில்முனைவோர் முதல் இசை மற்றும் சினிமா வரையிலான துறைகளைச் சேர்ந்தோர் என பல தரப்பினரும் உள்வாங்கப்பட்டுள்ளனர். இந்த திட்டத்தின் கீழ், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற ஊழியர்களின் முதல் தொகுதியினர் 2025 மேயில் புது டில்லிக்கு பாராளுமன்ற ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் வழங்கப்படும் ஒரு வார கால பயிற்சிக்காக பயணிக்கவுள்ளனர்.

7. இலங்கை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்கள் 2024 டிசம்பரில் இந்தியாவிற்கு விஜயம் செய்தபோது இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி மற்றும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஆகியோரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட' பகிரப்பட்ட எதிர்காலத்திற்கான பங்குடைமைகளை வளர்ப்பது' என்ற கூட்டுத் தொலைநோக்கை செயல்படுத்துவதில் இலங்கை-இந்திய பாராளுமன்ற நட்புறவு சங்கம் மற்றொரு படியாகும். இதேவேளை ஜனநாயக பெறுமானங்களை ஊக்குவிப்பதற்கும், சிறந்த நிறுவன நடைமுறைகள் குறித்த நிபுணத்துவத்தைப் பகிர்வதற்கும் கிரமமான பாராளுமன்ற அளவிலான பரிமாற்றங்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுவாக்குவதுடன் இந்த உறவை அயலுறவுகளுடனான நட்புரீதியான உறவுகளுக்கான புதிய நியமமாகவும் மாற்றுகின்றது.

*******

**கொழும்பு**
**09 மே 2025**